


**25.04.2025**

**தலைப்பு செய்திகள்**

- தேசிய நலனே அனைத்திற்கும் முதன்மையானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.
- குவாண்டம் தொழில்நுட்பத்தின் மூலம் பல்வேறு பிரச்சனைகளுக்கு உரிய தீர்வை எட்ட முடியும் என்று மத்திய அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.
- மகளிர் உரிமை தொகை திட்டத்தில் விடுபட்டவர்கள் வரும் ஜூன் மாதம் முதல் விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.
- தொழில்துறை மாற்றத்திற்கான மையமாக தமிழகம் உருவெடுத்து வருவதாக தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பிராஜா தெரிவித்துள்ளார்.
- ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

***********

**ஜக்தீப்தன்கர்**

தேசிய நலனே அனைத்திற்கும் முதன்மையானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

உதகையில் பல்கலைகழகங்களின் துணைவேந்தர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் நம் நாடு ஆற்றலும் வளமும் மிக்க வல்லரசு நாடாக திகழ்கிறது என்று பெருமிதம் தெரிவித்தார்.

முக்கியத்துவம் இல்லாத விஷயங்களுக்காக நாம் வழிமாறக்கூடாது என்றும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தமிழ்நாட்டில் அரசு பல்கலைகழகங்களின் தரத்தை உயர்த்துவதற்காகவே துணை வேந்தர்கள் மாநாடு நடத்தப்படுவதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக டெல்லியிலிருந்து சிறப்பு விமானம் மூலம் கோவை வந்தடைந்த திரு.ஜக்தீப் தன்கரை மாநில அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இதனையடுத்து தனி ஹெலிகாப்டர் மூலம் உதகை வந்த திரு.ஜக்தீப் தன்கரை தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி மாநில அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், உள்ளிட்டோர் வரவேற்றனர்.

திரு.ஜக்தீப்தன்கர் இன்றும் நாளையும் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இதன் ஒருபகுதியாக உதகையில் உள்ள முதினாமுத், தோடர் கோவிலுக்கு இன்றுமாலை அவர் செல்கிறார்.

முதுமலை புலிகள் சரணாலயம் மற்றும் யானைகள் முகாமையும் அவர் பார்வையிடுகிறார்.

நாளை மறுநாள் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைகழககத்தில் நடைபெறும் வேளாண் கருத்தரங்கில் அவர் பங்கேற்கிா்.

குடியரசு துணை தலைவரின் வருகையை ஒட்டி கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

***********

**ஜோதிர் ஆதித்ய சிந்தியா**

குவாண்டம் தொழில்நுட்பத்தின் மூலம் பல்வேறு பிரச்சனைகளுக்கு உரிய தீர்வை காண முடியும் என்று மத்திய அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச குவாண்டம் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் இந்த மாநாடு படைப்பாற்றல் திறனுக்கு புதிய உத்வேகத்தை வழங்கும் என்று கூறியுள்ளார்.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும் இது வழிகோலும் என்று கூறிய அவர் குவாண்டம் கணினிகள் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதால் பாதுகாப்பான தொடர்பு முறைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டார்.

***********

**Upendra Dwivedi**

நாட்டின் ராணுவ தளபதி ஜென்ரல் **Upendra Dwivedi** ஸ்ரீநகரில் பஹல்காம் தாக்குதலை அடுத்து உருவாகியுள்ள நிலைமையை இன்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

தாக்குதல் நடந்த பைசரான் வன கிராமத்தையும் அவர் பார்வையிடுவார்.

இதனிடையே அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து பாதுகாப்பு படையினர் அவர் கேட்டறிந்து வருகிறார்.

இதனிடையே போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி பாகிஸ்தான் ராணுவம் குப்வாரா, ரஜெளரி பூஞ்ச் பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

பதிலுக்கு இந்திய துருப்புக்களும் எதிர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

***********

**குடியரசு தலைவர்**

மறைந்த கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் ஃபிரான்சிஸின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாடிகன் சென்றுள்ளார்.

செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் நாளை நடைபெறும் போப்பின் இறுதி சடங்கில் இந்தியா சார்பில் குடியரசு தலைவர் பங்கேற்கிறார்.

***********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 121-வது முறையாக நாளை மறுநாள் காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய தங்கள் கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, mygov இணையதளம் 18 00 11 7800 என்ற தொலைபேசி எண் அல்லது 1922 என்ற எண்ணில் குறுஞ்செய்திகளாகவும் இன்றுமாலை வரை தெரிவிக்கலாம்.

***********

## ESI

நாட்டில் தொழிலாளர் காப்பீடு ESI திட்டத்தின் கீழ் கடந்த பிப்ரவரி மாதம் 15 லட்சத்து 43 ஆயிரம் பேர் இணைந்துள்ளதாக மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் 7 லட்சத்து 36 ஆயிரம் பேர் 25 வயது பிரிவை சேர்ந்தவர்கள் என்றும் கூறியுள்ளது.

23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய அமைப்புகள் தொழிலாளர் காப்பீட்டு நிறுவன திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளதாகவும அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கு முறையாக விண்ணப்பித்தால் தகுதி வாய்ந்த அனைவருக்கும் உரிமை தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர் இந்த திட்டத்தின் கீழ் விடுபட்டவர்கள் வரும் ஜுன் மாதம் முதல் விண்ணப்பிக்கலாம் என்றார்.

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் 4ஆவது கட்டம் வரும் ஜுன் மாதம் தொடங்கப்படும் என்றும் 9 ஆயிரம் இடங்களில் இதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்றும் கூறினார்.

**வாய்ஸ்**

***********

**டி.ஆர்.பி.ராஜா**

தமிழ்நாட்டில் சாம்சங் நிறுவனம் கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பிராஜா இன்று சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை தொடர்பான கொள்கை விளக்க குறிப்பை வெளியிட்ட அவர், மணப்பாறை அருகே மொண்டிப்பட்டி செய்தித்தாள் காகித நிறுவனத்தின் 340 கோடி ரூபாய் மதிப்பில், புதிய மெல்லிழை காகித இயந்திரம் நிறுவப்படும் என்றார்.

இதன் மூலம் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார்.

துறை சார்ந்த கொள்கை மேம்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறிய அவர், சுற்றுச்சூழல் தர நிலைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டினை அரசு ஊக்குவிக்கும் என்றார்.

நாட்டின் தொழில்துறை மாற்றத்திற்கான மையமாக தமிழகம் தயாராகி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

***********

**கவன ஈர்ப்பு**

டெல்டா மாவட்டங்களில் குறுவை பாசனத்திற்காக மேட்டூர் அணை வரும் ஜுன் 12ஆம் தேதி திறக்கப்படும் என மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு இன்று பதில் அளித்து பேசிய அவர் திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட 12 டெல்டா மாவட்டங்களில் 98 கோடி ரூபாய் செலவில் 5 ஆயிரத்து 21 கிலோமீட்டர் தூரத்திற்கு கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

காவிரி நீர், கடைமடை பகுதி வரை சென்றடையும் வகையில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

***********

**மானியக்கோரிக்கை விவாதம் அன்பில் மகேஷ்**

தமிழ்நாட்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் கணினி அறிவியல் படிப்புக்காக வசூலிக்கப்பட்ட தனி கட்டணம் ரத்து செய்யப்படுவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேரவையில் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதில் அளித்து பேசிய அமைச்சர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்றார்.

அரசு உதவிபெறும் 654 மேல்நிலை பள்ளிகளிலும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் என்றார்.

அரசு நடுநிலை பள்ளி மாணாக்கரின் தமிழ் ஆங்கிலம் கணித திறன்களை மேம்படுத்தும் வகையில் 19 கோடி ரூபாய் செலவில் "**திறன்**"' முனைப்பு இயக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

**வாய்ஸ்**

***********

**கோவி செழியன்**

மாநில சுயாட்சியை நிலைநாட்ட சென்னை தரமணியில் உள்ள தொழில்நுட்ப வளாகம் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான பதிலுரையின்போது இதனை தெரிவித்த அவர் அரசு கலை கல்லூரிகளில் 61 கோடி ரூபாய் செலவில் ஆய்வகங்களின் தரம் உயர்த்தப்படும் என்றார்.

அரசு கல்லூரிகளில் பசுமை தோற்ற முகப்பு நுழைவு வாயில் அமைக்கப்படும்,

அந்தியூர் மற்றும் அரவக்குறிச்சியில் உள்ள கல்லூரிகளில் சுமார் 17 கோடியே 50 லட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டப்படும்,

தமிழ்க்கனவு திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் கூறினார்.

***********

**மா.சுப்பிரமணியன்**

சென்னையில் கோவிட் அறிகுறி தென்பட்டாலும் அதன் வீரியம் குறைந்து காணப்படுவதால் பொதுமக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் உடலுக்கு தீங்கு ஏற்படுவதை கருத்தில் கொண்டு முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மயோணைஸின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

***********

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப் 4 தேர்வுகள் வரும் ஜூலை மாதம் 12ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 3 ஆயிரத்து 935 பணியிடங்களுக்கு இன்றுமுதல் அடுத்த மாதம் 24ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

**மலேரியா தினம்**

உலக மலேரியா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மலேரியா நோயை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***********

ரயில் - **அன்பழகன்**

திருவாரூர் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு பணிகளை தெற்கு ரயில்வேயின் கோட்ட மேலாளர் திரு.அன்பழகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தண்டவாளங்கள், சிக்னல் விளக்கு பராமரிப்புகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்க அவர் அறிவுறுத்தினார்.

***********

இருவரி

**திருச்சி மாவட்டத்தில் 427 ஏரி குளங்களில்** விவசாயிகள் பொதுமக்கள் இலவசமாக மண் எடுத்துச்செல்ல இ-சேவை மையங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**கன்னியாகுமரி மாவட்டம் கோணத்தில்** பட்டு வளர்ச்சி துறையில் செயல்முறை பயிற்சி நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர். அழகுமீனா இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மதுரையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி** சங்கீதா தலைமையில் இன்று விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற்றது.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊர்காவல்** படைக்கு ஆட்கள் தேர்வு நடைபெறுவதால் விருப்பமுள்ளோர் வரும் 29ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம்** பச்சுடையான்பட்டி பகுதியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 400க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் 700க்கும் மேற்பட்ட காளைகளை இன்று அடக்கினர்.

***********

**ஸ்ரீரங்கம்**

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில் சித்தரை தேரோட்டம் நாளை நடைபெறும் நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் வஸ்திர மரியாதை இன்று ஸ்ரீரங்கத்திற்கு வந்தடைந்தது.

தேரோட்டத்தின் போது தேரில் எழுந்தருளும் நம்பெருமாள் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடி தந்த மாலை, வஸ்திரங்களுடன் சேவை சாதிப்பார்.

***********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

***********

**டென்னிஸ்**

டுனிஷியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் **Zeel Desai** - பல்கேரியாவின் **Lidia Encheva**-வை எதிர்கொள்கிறார்.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**